**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 13–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.D.விக்னேஷ் | **PW–31** | தொழில் | – |
| த/க பெயர் | –தனசேகரன் | | வயது | –36 |
| கிராமம் | – | | | |
| தாலுக்கா | – | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் சென்னை புழுதிவாக்கத்தில் குடியிருக்கிறேன். தனியார் வங்கியில் வேலை பார்க்கிறேன். நான் பி.இ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் சென்னையில் உள்ள ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியில் 2007 முதல் 2011 வரை படித்தேன். தற்போது சாட்சியமளித்துச் சென்ற அ.சா.30 கிருஷ்ணமூர்த்தி மகன் விக்னேஷ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவரும் நானும் ஒன்றாக இன்ஜினியரிங் படித்தோம். மோகன் பாபு என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் அவர் என் பெரியம்மாவின் மகன் ஆவார். நாங்கள் வெளிநாட்டில் மேற்படிப்பு மற்றும் வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருந்தோம். அதற்கு முயற்சி செய்வதற்காக வாய்ப்பு இருந்தால் உதவுமாறு என் சகோதரர் மோகன் பாபு உடன் நாங்கள் கேட்டபோது அவர் எங்கள் சான்றிதழ்களை தரச் சொன்னார். நான் என்னுடையபத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மற்றும் பி.இ கோர்ஸ் கம்ளிஷன்

சான்றிதழை அவரிடம் கொடுத்தேன். அவை **அ.சா.ஆ. 83 முதல் 85** ஆகும். நான் அந்த காலகட்டத்தில் நடந்த அரசு தேர்வுகள் மற்றும் தனியார் வேலை சம்பந்தமான தேர்வுகள் அனைத்தும் விண்ணப்பித்திருந்தேன். 2012 ஆம் ஆண்டு குரூப் 2 தேர்வுக்கு ஆங்கிலம் மற்றும் ஜிகே தேர்வு செய்த விண்ணப்பித்திருந்தேன். அந்த தேர்வை நான் எழுதினேன், என் நண்பர் விக்னேஷ்ம் எழுதினார். என் அண்ணனிடம் நான் கொடுத்த சான்றிதழ்கள் என்ன ஆனது என்றால் அவர் அதை என்ன பண்ணினார் என்று எனக்கு தெரியாது, அவரிடம் கொடுத்தது மட்டும்தான், அதன் பின்னர் அதற்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. பின்னர் செய்தியில் 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குரூப் 2 தேர்வு வினாத்தாள் லீக் ஆன காரணத்தினால் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேன். பின்னர் நிறைய நாட்கள் கழித்து தான் என் அண்ணன் மோகன் பாபு அந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற விவரம் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கு தொடர்பாக கோவையில் சிபிசிஐடி டிஎஸ்பி என்னை விசாரித்தார் என்றால் ஆமாம். டிஎஸ்பியிடம் கொடுத்த வாக்குமூலம் தவிர வேறு எங்கேயும் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. சாட்சியிடம் 20.09.2013 ஆம் தேதி ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் என் இரண்டு பதிவு செய்த 164 வாக்குமூலம் காண்பிக்கப்பட்டது சாட்சி அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று சொன்னார் அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.86** ஆகும்.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

Digitally signed by K KRISHNA PRIYA

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

20.09.2013ஆம் தேதி ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நான் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் ஆமாம். அதுதான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் ஆமாம். அந்த வாக்கு மூலத்தில் நான் நடந்த விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் டிஎஸ்பி என்னை விசாரித்த போதும் நடந்த உண்மைகளை தான் அவரிடம் நான் சொன்னேன் என்றால் ஆமாம். என் அண்ணன் மோகன்பாபு என்பதால் அவர் கேட்டுக் கொண்டதனால் முதல் விசாரணையில் டிஎஸ்பி தவிர வேறு எங்கும் நான் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் மேலும் எனது அண்ணன் மோகன் பாபு ஸ்ரீதர் என்கிற ஸ்ரீதர் ராஜிடம் சான்றிதழை கொடுத்தால் அவர் குரூப் 2 வேலை வாங்கி தருவார் என்று சொன்னார் என்றும் அதை நம்பி நானும் எனது நண்பர் விக்னேஷும் எங்களுடைய அசல் சான்றிதழ்களை என் அண்ணன் மோகன் பாபுவிடம் கொடுத்தோம் என்றும் அதை பெற்ற என் அண்ணன் மோகன் பாபு அதை ஸ்ரீதர் என்ற ஸ்ரீதர் ராஜிடம் கொடுத்தார் என்றும் மேலும் எனது அண்ணன் எங்களிடம் நீயும் விக்னேஷும் ஆங்கிலம் பொது அறிவியியல் 2012 ஆம் ஆண்டு நடந்த குரூப் 2 தேர்வில் தேர்வு செய்ததால் அவரால் எங்களுக்கு உதவ முடியாது என்று சொன்னார் என்றும் போலிஸ் விசாரணையில் மற்றும் நீதித்துறை நடுவர் முன் பதிவு செய்த 164 குவிமுச விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் ஸ்ரீதர் ராஜ் யார் என்று எனக்கு தெரியாது, மேலும் அந்த சமயத்தில் அந்த தேர்வு நடந்ததால் அதை பற்றி

Digitally signed by K KRISHNA PRIYA

சொல்லியுள்ளேன் ஆனால் நான் சான்றிதழ்கள் பொதுவாக தான் கொடுத்தேன். மோகன் பாபு என் அண்ணன் என்பதனால் அவரை காப்பாற்றும் பொருட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:- இல்லை.

<u>4, 6 முதல் 9, 11, 14, 21, 22, 25, 26 மற்றும் 28-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு சிபிசிஐடி போலீஸ் தான் என்னை வரச்சொன்னார்கள் என்றால் சரி. ஈரோடு நீதிமன்றம் எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றும் 2013ஆம் ஆண்டு வாக்குமூலம் கொடுப்பதற்கு போலீஸ் தான் என்னை அழைத்து வந்தார்கள் என்றால் ஈரோடு வரையில் நானாகவே வந்து விட்டேன், ஈரோட்டில் இருந்து நீதிமன்றத்திற்கு போலீஸ் அழைத்துச் சென்றார்கள். போலிஸ் என்னை முதலில் சிபிசிஐடி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று எவ்வாறு வாக்குமூலம் சொல்ல வேண்டும் என்று சொல்லித் தந்தார்கள் என்றால் ஆமாம். சிபிசிஐடி போலீஸ் சொல்லித் தந்த படி அவர்களின் நிர்பந்தத்தின் காரணமாக நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரி. டிஎஸ்பி விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தை என்னிடம் படித்துக் காண்பிக்கவில்லை என்றால் சரி. அரசு வேலைக்கு என நான் சான்றிதழ் எதுவும் கொடுக்கவில்லை உயர் படிப்பு மற்றும் வெளிநாட்டு வேலைக்காக தான் சான்றிதழ் கொடுத்தேன் என்றால் சரி. காவல்துறைக்கு பயந்து அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது

உண்மைக்கு மாறான தகவல்களை சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

**4, 6 முதல் 9, 11, 14, 21, 22, 25, 26 மற்றும் 28-ம் வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 17, 18, 19, 12, 13, 16, 15, 20, 23, 24, 29 மற்றும் 30-ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Digitally signed by K KRISHNA PRIYA